# உலக தமிழோசை

ULAKA THAMILOSZAI

சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம்



10வது ஆண்டில்

விளம்பரம்
VLAMBARAM™

☎ (416) 282-8059
(416) 282-4978



நதி 10 DECEMBER 15, 2000 பாலம் 24



❄ சிறிய நீர்மூழ்கிக் கப்பலை உடலிற்குள் செலுத்த முடியுமா? (பக். 2)

❄ வாகன சாரதி குற்றம் சாட்டப்பட்டால் செய்ய வேண்டியது? (பக். 4)

❄ வாகனங்கள் வாங்கும் போது..... (பக். 03)


❄ சூரிய குடும்பத்தின் இரகசியம் என்ன? (பக்.9)

❄ 1982இல் புதிய நடிகர்??? (பக். 07)


❄ 20ஆம் நூற்றாண்டின் சிறந்த விளையாட்டு வீரர் (பக்.6)

❄ உலகில் உழைத்து வாழ்பவர்கள்.... (பக். 12)

❄ மில்லினியம் பனிமழை (பக். 14)


## உணவு



* பெரும்பாலான நோய்களுக்கு வயிறுதான் காரணம். செரித்த பிறகு உண்டால் நிறைய நோய்களைத் தவிர்க்கலாம், பசித்த பிறகு புசி.
* தூய உணவை உண்டால் தூய குணம் வளரும்.
* உங்கள் வயிற்றில் மூன்றில் ஒரு பகுதியை உணவுக்கும் இன்னும் ஒரு பகுதியை நீருக்கும், மூன்றாவது பகுதியை மூச்சுக்கும் பிரித்து வைத்துக்கொள்ளுங்கள்
* ஒருவன் வாழ்வதற்காக உண்ண வேண்டும்; உண்பதற்காக வாழக்கூடாது.
* ஒரு நாளைக்கு ஒரு தடவை நல்ல உணவு உண்ண வேண்டும்.
* தூங்குமுன் நமக்கு சக்தி அதிகம் தேவையில்லை. எனவே எளிய உணவு போதும். தூங்குமுன் நிறையச் சாப்பிடுவது உடல் எடையைக் கூட்டும். பல அஜீரணக் கோளாறுகள் ஏற்பட வாய்ப்புண்டு.
* மிகக் குறைவாக சாப்பிட்டுவிட்டேன் என்று ஒரு போதும் கவலைப்படாதே.

1. உணவை உட்கொள்வதற்கு முன்பு வணங்க வேண்டும்.

(தொடர்ச்சி 14ஆம் பக்கம்)

## உன்னை அறிந்தால்

ஒரு விடயம் பூரணமாக தெரியாமல் இருக்கும் போது அதற்கு ஒரு மதிப்பு இருந்து கொண்டிருக்கும். இது எல்லாவிதமான செயல்கள், நடைமுறைகளிற்கும் பொருந்தும், தனக்குள் உள்ள தவறை அறியாமல் மற்றவரிற்கு பாடம் புகுட்டுவது சிலரின் வழக்கம். தன்னைப் பெரியவன் என்று காட்டிக் கொள்வதற்கு இந்த வழிமுறைகளையும் சிலர் தெரிவு செய்யலாம்.

அமெரிக்காவின் அரசியல் முறையையும் இதற்கு ஒப்பிடலாம். எத்தனை 100 ஆண்டுகளிற்கு முன் உருவாக்கப்பட்ட முறையைக் கொண்டு இன்னும் அதனைப் பாவிப்பது எவ்வளவிற்கு சாத்தியம். திருத்தப்பட வேண்டியவை திருத்தப்படவில்லை, அப்படி இருக்க மற்றவர்களிற்கு ஜனநாயகம் கூறலாமா?

சரியோ, தவறோ வழங்கப்பட்ட ஒவ்வொரு வாக்குகளிற்கும் பெறுமதி இருக்கு. அதனை தவிர்ப்பது சரியா? யார் சொல்வது யாரிற்கு?

நல்லதைச் சிந்திப்போம்.. நல்லதையே செய்போம். நாளை நமதே. -நெற்றிக்கண்ணன்


இழந்த முடியை மீண்டும் பெற வாருங்கள்

சபோனாவிற்கு!

SABONA & Gift

☎: (416) 264-8787 ☎: (416) 269-8151
2602 B Eglinton Ave. E., Scarborough



உலக தமிழோசை ஆக்கங்கள் பிரதி சனி தோறும் 12:15மணிக்கு CTBC இல்





SINGAPORE CELLUAR

$29.00
Mon. - Fr. 6:00 p.m to 8a.m FREE
Sat. & Sun. FREE & Much More

$49.00
3 Months Service
Numeric + Voice
+ Activation FREE PAGER

$55.00 +Taxes / Month
7 a.m. - 7 p.m. 400min. இலவசம்
7 p.m. - 7 a.m. கிழமை நாள் இலவசம்
Fri. 7 p.m. - Mon. 7 a.m. இலவசம்
மேலதிக நிமிடம் 20 சதம் மட்டுமே

CANTEL
Bell Mobility

Mobile Message, Call Waiting, Call Display per second billing included.
மேலதிக விபரத்திற்கு சக்தி: (416) 745-2378

HOTLINE: (416) 980-1234



துரித பணமாற்றுச் சேவை



வவுனியா - கொழும்புச் சுற்றுப் புறங்களுக்கும் - சிங்கப்பூர் - சென்னை ஆகிய இடங்களுக்கு கடுகதியில் பணம் அனுப்புவதற்கு

மு. காசிப்பிள்ளை & சன்ஸ்

☎ (416) 267-8221





சிவாகம கிரியா பீடம்

☎: (416) 724-7480

திருமணம், பதிவுத்திருமணம், பூப்பு நீராட்டு விழா, புண்யாக வாசனம், வீடு குடி புகுதல், திருமணம் விஷேச தனபாக்கிய பூஜை கடை திறப்பு, லக்சுமி பூஜை சிரார்த்த மஹாளயாதி பிதிர் பூஜைகள் மற்றும் ஜோதிஷம் பார்த்தல், ஜனன ஜாதகம் எழுதுதல், விவாகப் பொருத்தம் பார்த்தல், மஹாகணபதி ஹோமம் ஆயுஷ்ய ஹோமம் தாரதோஷ மாங்கல்ய தோஷ நிவர்த்தி ஹோமம் மற்றும் முத்து மணவறையா? தலைஅலங்கார ஜோடனைகளா? ஜடை நாகம் ஆண்டாள் மாலைகளா? தலைப்பாகையா? பரத நாட்டிய அலங்கார ஆபரணங்களா? மற்றும் கல்யாண மண்டபமா? உங்கள் தேவைகளுக்கு அணுகுங்கள். சிவஸ்ரீ ச. கு. ஸ்ரீதரக்குருக்கள் (கண்ணன் குருக்கள்) திருமணப் பதிவாளர் / நிர்வாகி சிவாகம கிரியா பீடம்

5 Greenleaf Terr., Scarborough, Ont.



VLAMBARAM, P.O. BOX 37527, 31 TAPSCOTT RD. TORONTO, ONT. M1B 5P9, CANADA

TEL: (416) 282-8059
FAX: (416) 282-4978
e-mail: vlambaram@email.com




# அறிவும் ஆக்கமும் (70)

-விஜே குலத்துங்கம்

கடல் நீருக்கடியில் அசைந்து திரியும் நீர்மூழ்கிக் கப்பலைப் பற்றி கேள்விப்பட்டுள்ளோம். இது நூற்றுக் கணக்கானோர் அமர்ந்து செல்லக் கூடிய பெரிய அமைப்பு. ஆனால் மிக நுண்ணிய அளவில் எங்கள் உடலின் இரத்த ஓட்டத்தில் அசைந்து திரியக் கூடிய ஒரு அமைப்பினை உருவாக்குவதில் விஞ்ஞானிகள் முயன்று வருகின்றார்கள். இவையெல்லாம் ஒரு கற்பனைக் கதைபோல உங்களுக்குதென்படும். பல வருடங்களுக்கு முன்னர் இது ஒரு கற்பனைக் கதைபோல உங்களுக்கு தென்படும். பல வருடங்களுக்கு முன்னர் இப்படியான ஒரு கதையாகத்தான் இருந்தது. பல வருடங்களுக்கு முன்னர் இப்படியான ஒரு கதையை கொண்ட ஆங்கிலத் திரைப்படம் ஒன்று வந்தது. இத் திரைப்படத்தின் கதை குமுதம் வார இதழில் பின்னர் தொடர் கதையாக வந்தது. இந்தக் கதைப்படி ஒரு பிரபல விஞ்ஞானியின் மூளையில் ஒரு இரத்தக்குழாயில் ஒரு கட்டி தோன்றிவிட்டது. மூளையில் சத்திர சிகிச்சை மூலம் இதை அகற்ற முயன்றால் மூளையில் சில நேரம் பாதிப்பு ஏற்பட்டு, இந்த பிரபல விஞ்ஞானியின் நினைவுகள் அபார ஆற்றல் போன்றவை பாதிக்கப்படலாம் என்ற அச்சத்தில் சத்திர சிகிச்சையை கைவிட்டு, வேறு ஒரு முறையை கையாண்டார்கள். ஒரு சிறிய நீர்மூழ்கிக் கப்பலை அமைத்து அதில் பல தரப்பட்ட விஞ்ஞானிகளையும், வைத்திய நிபுணர்களையும் ஏற்றிவிட்டு சில கதிர்களை உபயோகித்து, இந்த நீர்மூழ்கிக் கப்பலை ஒரு சிறிய நுண்ணிய வடிவமாக மாற்றி, ஒரு மருந்து ஊசிமூலம், அந்த விஞ்ஞானியின் உடலினுள் ஏற்றிவிட்டார்கள். இந்த நீர்மூழ்கிக் கப்பல் இரத்த ஓட்டத்தில் செலுத்தப்பட்டு மூளையில் இருந்த இரத்தக் கட்டி இருக்கும் இடத்தை அடைந்து, அந்தக் கட்டியை அகற்றி, பின்னர் அந்த நீர்மூழ்கிக் கப்பலை வெளியே கொண்டுவந்து பழைய அளவுக்குக் கொண்டு வந்தார்கள். ஆனால் பெரிய ஒரு வடிவத்தை மிக நுண்ணிய அளவிற்கு மாற்றுவது விஞ்ஞானத்தில் சாத்தியமாகும் என்பது தற்போது உள்ள விஞ்ஞான முன்னேற்ற அளவில் சாத்தியமில்லை என்பது தெரிந்த விடயம்.

ஆனால் மிக நுண்ணிய அளவில் ஒரு நீர்மூழ்கிக் கப்பலை அமைப்பது சாத்தியமாகியுள்ளது.அமெரிக்காவிலுள்ள **Utah state university** இல் இதைப்பற்றிய ஆராய்ச்சிகள் நடக்கின்றன. இந்த நீர்மூழ்கிக் கப்பலின் வடிவம் திரவத்தால் நிரப்பப்பட்ட ஒரு உருளை வடிவமான அமைப்பினுள் ஒரு சிறு **disc** ஒன்று காணப்படும். இந்த **Disc** இல் வேண்டிய மருந்தோ அல்லது வேறு சிகிச்சை அளிக்கும் இரசாயனப் பொருட்களும் இருக்கலாம். இந்த சிறிய அபைப்பு பக்டீரியாவை உபயோகித்து உடலின் வேண்டிய பாகங்களுக்கு எடுத்துச் செல்லப்படலாம். இந்த நுண்ணிய நீர்மூழ்கிக் கப்பல் என்ற அமைப்பு பக்டீாயாவுடன் பிணைக்கப்பட்டு உடலினுள் ஊசிமூலம் ஏற்றப்பட, பக்டீரியா இரத்த ஓட்டத்துடன் வேண்டிய இடத்திற்கு எடுத்துச் செல்லும். தற்போது வழக்கத்திலுள்ள முறையில் மருந்துகளை உட்கொண்டாலோ, அல்லது ஊசியை ஏற்றினாலோ உடல் முழுவதும் இந்த மருந்து பரவுகின்றது. ஆனால் இந்த புதிய நீர்மூழ்கிக் கப்பல் முறையில் வேண்டிய இடத்திற்கு மருந்து எடுத்துச் செல்லப்பட்டு அங்கு சிகிச்சை அளிக்கக்கூடியதாகவுள்ளது. சல்மோனல்லா மற்றும் **E-coli** பக்டீரியாக்கள் இந்த நுண்ணிய அமைப்பை உடலினுள் கொண்டு செல்ல உபயோகிக்கப்படலாம். இரத்தக் கட்டிகளையும் **Tumour,** இரத்தக் குழாய்களிலுள்ள கொழுப்பு அடைப்புகளையும் இழப்பதற்க இவை உபயோகிக்கப்படலாம்.



இன்னும் ஒரு வருடத்தில் ஒரு மில்லிமீற்றரைவிட சிறியதாக இந்த அமைப்புகளை வர்த்தக ரீதியில் உருவாக்கமுடியும் என அமெரிக்காவின் **Renaissance Technologies** என்ற நிறுவனம் தெரிவிக்கின்றது. இதே நேரத்தில் நேர்மனியைச் சேர்ந்த **Micro Text** என்ற நிறுவனம் பக்டீரியாவின் உதவியில்லாமல், வெளியே இருந்து காந்த சக்தி மூலம், உடலினுள்ள இந்த நுண்ணிய அமைப்பிற்கு செலுத்தமுடியும் எனக் கூறுகின்றது.

இந்த நுண்ணிய நீர்மூழ்கிக் கப்பல்களை ஆங்கிலத்தில் **Microscopic submarine** என அழைக்கின்றார்கள். இதேபோல் நுண்ணிய உலங்கு வானூர்திகளையும் **Microscopic helicopter** களையும் அமைப்பதற்கு வேறு ஆராய்ச்சியாளர்கள் முயன்று வருகின்றார்கள். நுணுக்குக் காட்டியினூடாக மட்டும் பர்க்க கூடியதான மிகச் சிறிய அபைப்புகளை ஒரு வைரசுவின் அளவில் அமைத்து உள்ளார்கள். இந்தச் சிறிய அபைப்பின் காற்றாடி உலோகத்தினால் ஆக்கப்பட்டு இந்த அமைப்பு உடலில் அசைந்து திரிய உடலின் சக்திப் பொருளான **ATP** இலிருந்து சக்தி பெறப்படும். இந்த மூன்று அமைப்புகளும் வெவ்வேறாக உடலுக்குள் அனுப்பப்பட்டு, உடலினுள் வேண்டிய இடத்தில் நுண்ணிய ஹெலிக்கொப்டர் அமைப்பை உருவாக்கும். அமெரிக்காவவிலுள்ள **Cornell** பல்கலைக்கழககத்தின் விஞ்ஞானிகள் இது பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளார்கள்.



இவர்கள் தயாரித்த முதல் 400 அமைப்புகளில் 5 மாத்திரம் உடலினுள் இயங்கக் கூடியதாகவிருந்தது. எதிர்காலத்தில் இவை திருத்தியமைக்கப்பட்டு வெற்றிகரமாக இயங்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. உடலுக்குள் கலங்களினுள் இவை இயங்கக் கூடியதாக வரும் பொழுது, உடலினுள் பல மருத்துவச் சேவைகளை இது செய்யக் கூடியதாக வரும் என நம்பப்படுகின்றது.

**"ஆறிவும் ஆக்கமும்" பற்றிய உங்கள் கருத்துக்களை நீங்கள் எந்த வகையான விடயங்களை இக்கட்டுரையில் எதிர்பார்க்கின்றீர்கள் என்பதை வீஜே குலத்துங்கம் –361 Highglen Ave, Markham, Ontario, L3S 3M2 என்ற விலாசத்திற்கு அல்லது wijey@ interlog.com என்ற விலாசத்திற்கு e-mail அனுப்பவும்.**


13 வருடங்களாக தமிழர் மத்தியில் நன்மதிப்பைப் பெற்ற

# யோகாஸ்

புதிய இடத்தில்

☎: (416) 267-0408


## குறுக்கு எழுத்துப் போட்டி இல. 114

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | 2 | | ■ | | 3 |
| | ■ | ■ | | ■ | 4 | ■ | |
| 5 | | | | | ■ | 6 | |
| | ■ | ■ | | ■ | 7 | | |
| ■ | | ■ | ■ | 8 | | | ■ |
| 9 | | | | | ■ | ■ | |
| ■ | | ■ | ■ | ■ | 10 | 11 | |
| ■ | 12 | | | | ■ | | 13 |

**இடமிருந்து - வலம்**

1. கிழக்கு தமிழ் ஈழத்தின் ஒரு ஊர்
3. புழுதி (வல- - இட) 4. பசு
5. பகிர்ந்து கொடுத்தல்
6. மன்னரின் தலையில் அணிவது
7. பிரதி 8. படகு
9. போட்டியில் வென்றவர் அணிவது
10. பெண்களின் உடை 12. அழுக்காறு
13. நீர் மெதுவாக ஊறு (வல - இட)

**மேலிருந்து கீழ்**

1. மழை நீரில் சூரிய ஒளி தெறிப்பால் தெரிவது
2. ஊழியன்
3. இது மீன் பிடிக்க உதவும்
6. அகத்தின் அழகு தெரியும் இடம்
7. காலால் செல் 8. சரி
11. படி
12. மருந்து (கீழ் - மேல்)
13. இறுதி (கீழ் - மேல்)

சரியான விடைகளில் இருவர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படுவர். இவர்களுக்கு "யோகாஸ்" இல் பாவிக்கக்கூடிய $15. $10 Gift Certificates வழங்கப்படும். இதற்கு cash value கிடையாது. விடைகள் DECEMBER 25, 2000க்கு முன்னர் விளம்பர விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ஆ | ரோ | க் | கி | ய | வா | ழ் | வு |
| ன | ■ | ■ | ■ | ■ | ■ | ■ | த |
| ந் | ■ | ல் | ர | வி | டை | ட் | க |
| த | ■ | த | ■ | ழு | ■ | ■ | ■ |
| ம் | ■ | மு | த் | தி | ரை | ■ | ம் |
| ■ | தை | ■ | ■ | ■ | தி | கு | த |
| ழி | வி | ■ | கா | ■ | த | ■ | ட |
| மே | க | ம் | ■ | ர் | யா | வை | ஔ |

**113இல் வெற்றி பெற்றோர்**
1) Alagarsamy Pattan, Toronto, Ont.
2) K. Muhilan, Scarborough, Ont.


*ஆட்டிறச்சி வியாபாரத்தல் தமிழ்மக்களின் உள்ளங்களை வென்றவர்!
* அன்றாட சந்தையில் மரக்கறி, மீன்வகைகளை தினம் தருவித்து வாடிக்கையாளர்களின தொகையில் உயர்ந்தவர்!
* வாடிக்கையாளர்களின் நன்மை கருதி புதிய இடத்தில்


*733 kennedy Road*
*[Ken-Mark Plaza]*

SUBA

DJ SERVICES

வண்ணக்கோலம்

திருமணம். பூப்புனித நீராட்டு விழா.
அரங்கேற்றம் மற்றும் அனைத்து சமய வைபவங்களுக்கும்
அழகிய முறையில் கோலம் செய்து தரப்படும்.


Pl.Call:(416)431-9451/565-4869


விடுகதை

1) காயில் கசந்தவன் பழத்தில் இனித்தான் அவன் யார்?
வேப்பம் பழம்
2) யாரோ அழைக்க இவன் ஒலிப்பான் அவன் யார்?
டெலிபோன்
3) சந்தையில் அழகாய் தெரிந்தவள் சமையலறையில் அழ வைப்பாள் அவள் யார்? வெங்காயம்
4) மாமனுக்கு மாடி வீடுதான் அது கூட நகரும் வீடுதான் அது என்ன? நத்தை
5) கறுப்பான் கண்ணீர் விட்டால் கழனியெல்லாம் புதுப்பொலிவு அவன் யார்? கார்மேகம் - மழை

# APPLEMORE AUTOMOTIVE


உட்புற, வெளிப்புற திருத்த, பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்

- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing




- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility




**Tel: (416) 285-4998**

**2500 Lawrence Ave. East, Unit #11, Scarborough, ON**

Apple Apple Apple Apple Apple Apple Apple Apple




## OODAM MAINTENANCE WORKS

Janitorial Services ("Sanitation for the Nation")



* KITCHEN RENOVATIONS
*BATHROOM REVOVATION
*TILES
*PLUMBING




*>Railing >Fencing >Welding*

Free Estimates

Pl. Call: Thamby - TEL./Fax: (416) **638-2796**

18 Brantley Cres. Downsview, NorthYork, M3J 1X5


## பத்திரிகை விளம்பரங்களில் ஏமாறாதீர்கள்



பத்திரிகைகளில் வரும் விளம்பரங்களை பார்த்துவிட்டுப்போய் கண்ணை மூடிக்கொண்டு பொருட்களை வாங்கி ஏமாறாதீர்கள். உண்மைச் சம்பவம் ஒன்றை இங்கு தர விரும்புகிறேன். தான் வாகனப் பிரதிநிதி என்று கூறிக்கொண்டு ஒருவர் பத்திரிகைகளில் விளம்பரங்கள் போடுவதை பத்திரிகைகளில் பலர் பார்த்திருப்பீர்கள். அந்த விளம்பரங்களை பார்த்து பொருள் வாங்கி ஏமாந்தோரில் ஒருத்தரை சென்னவாரம் சந்திக்க நேர்ந்தது. அப்போது அவர் கூறிய சிலவிடங்களை கேட்கும் போது தமிழா நீ ஏன் ஏமாறுகிறாய் என்று மனம் ஏங்கியது. என்னை சந்தித்தவர், வாகன பிரதிநிதியிடம் தான் புதிய வாகனம் வாங்க சென்றதாகவும் அவரோ 99ஆம் ஆண்டு வாகனத்தை இவருக்கு விற்று 19.5%. வட்டி வீதத்தையும் அறவிட்டதை கூறினார். அவர் வாகனம் வாங்கிய வேளை புதிய வாகனங்களுக்கு 5.8% பழையனவற்றுக்கு 9.25% தான் வட்டி வீதம். கூடுதல் வட்டி வீதத்தை அறவிடுவதன் மூலம் பெருமளவில் லாபம் சம்பாதிக்க முடியும். அதைத்தான் அவர் செய்துள்ளார். புதிய வாகனங்களை விட பழைய வாகனங்களை விற்பதன் மூலம் தான் பெருமளவிலும் இலாபம் கிடைக்கும். அதன் அடிப்படையில் தான் புதிய வாகனம் வாங்க சென்றவரை பழைய வாகனம் வாங்க செய்ததும் எம்மில் அனேகர் ஏற்கனவே ஏமாற்றப்பட்டது போதும். இனியும் எவரும் ஏமாற வேண்டுமா, ஒரு முறை சிந்தியுங்கள்?

***நத்தார் வாழ்த்துக்கள்***



*மேலதிக விபரங்களுக்கு- **சோதீஸ்** Cell (416) 704 -1179*


## நியூ மிலேனியத்தில் ஸ்காபரோவில் 9 வது வருட தன்னிகரற்ற சேவை

*உங்கள் சகலவிதமான ஐரோப்பிய, ஜப்பானிய, அமெரிக்க வாகனத்திருத்த வேலைகளுக்கும் நீங்கள் நாட வேண்டிய ஒரே இடம்*

**Also Air Conditioning Service & Repair**

**NTE AUTO INC.**
**New Trade Engineering**

**என். ரி. இ. ஓட்டோ இங்க்**

Contact: Sivabalan சிவபாலன்

**Tel: (416) 750 - 1573**

151 NANTUCKET BLVD., UNIT #12, SCARBOROUGH, ONT.





## ரொரன்ரோவில் அதிகமாக வீதி விபத்துகள் நடக்கும் சந்திகள்

1997-1999ஆம் ஆண்டுக்கு இடையில் ரொன்ரோவில் மிகவும் மோசமான வீதி விபத்துகள் நடந்த சந்திப்புகள் பின்வருமாறு!

| | | |
|---|---|---|
| 1) | மார்க்கம் & லோரன்ஸ் கிழக்கு [MARKHAM & LAWRENCE EAST] | 57 விபத்துகள் |
| 2) | வார்டன் & லோரன்ஸ் கிழக்கு [WARDEN & LAWRENCE EAST] | 56 விபத்துகள் |
| 3) | ஜேன் & பின்ச் அவெனியு மேற்கு [JANE & FINCH WEST] | 52 விபத்துகள் |
| 4) | மார்க்கம் & இலீஸ்மியர் [MARKHAM & ELLESMERE] | 52 விபத்துகள் |
| 5) | பார்ற்றஸ்ற் & பின்ச் அவெனியு மேற்கு [BATRUST & FINCH AVE.WEST] | 51 விபத்துகள் |
| 6) | லெஸ்லி & செப்பேர்ட் கிழக்கு [LESLIE & SEPPARD EAST] | 50 விபத்துகள் |
| 7) | வார்மன் கஸ்ரீல் அவெனியூ கிழக்கு [WARDEN & STEELS AVE.EAST] | 50 விபத்துகள் |
| 8) | ஜார்லிஸ் ரூ லேக்சோர் புலவேர்ட் கிழக்கு [JARVIS & LAkE BLVD.EAST] | 49 விபத்துகள் |
| 9) | பிளாக் கிறீக் ரைவ் & லோரன்ஸ் மேற்கு | 49 விபத்துகள் |
| 10) | டவரின் & பிள்ச் அவெனியு மேற்கு | 48 விபத்துகள் |

மேற்குறிப்பிடப்பட்ட பத்து சந்திகளுமே விபத்து நடந்த சந்திப்புகளில் அதாவது மிக மோசமான மரணத்தினை உருவாக்கிய அல்லது மோசமான உடல் பாதிப்பினையும், வாகனங்களுக்கு பாதிப்பினையும் உருவாக்கிய முதல் பத்து சந்திகளுமாகும்.

ரொரன்ரோ நகரசபையின் போக்குவரத்து பிரிவினால் வெளியிடப்பட் இவ் அறிக்கையில் இவ் ஆண்டுக்குரிய புள்ளி விபரங்கள் இதுவரை வெளியப்படவில்லை.

ஆதாரம்:- "ஸ்காபரோ மிரர்"

# ஒன்ராரியோ மாகாணத்தில் வாகனம் செலுத்துதல்?



பகுதி (41) - சிவ பஞ்சலிங்கம்

சென்ற இதழின் தொடர்ச்சி....

<u>விசாரணை திகதி நிர்ணயத்தினை மாற்றுதல்</u>

குற்றம் சாட்டப்பட்டவருக்கோ அல்லது சாட்சிகள் கொடுத்தவரோ குறிப்பிட்ட திகதியில் விசாரணையினை எதிர்கொள்வதில் ஏதாவது சிரமமாக இருந்தால் அது தொடர்பாக ஏழு நாட்களுக்கு முன்னரே நீதிமன்றத்திற்கு அறிவித்து மாற்றம் செய்யலாம். இம் மாற்றம் செய்யும் கோரிக்கையினை ஆங்கிலத்தில் **NOTICE OF MOTION** என அழைக்கப்படும்.

இக் கோரிக்கையினை மாகாண நீதிமன்றத்தில் வழக்கு தொடருநர் பிரிவில் பணி புரியும் நீதிமன்ற கிளாக்கிடம் சமர்ப்பித்து மாற்றத்தினை செய்து கொள்ள வேண்டும். விசாரணைக்கு திகதி நிர்ணயம் செய்யப்பட்ட திகதியிலும் ஏற்றுக் கொள்ள கூடிய சரியான காரணத்தினை காட்டி நேரடியாகவோ அல்லது பிரதிநிதிகள் மூலமோ திகதி மாற்றத்தினை செய்து கொள்ளலாம்.

இக் கோரிக்கை தொடர்பாக சமர்பிக்க வேண்டிய மாதிரி படிவத்தினை பின்வருமாறு தயார் செய்யலாம்.

**ONTARIO COURT OF JUSTICE [PROVINCIAL DIVISION]**
**NOTICE OF MOTION**

between

Her Majesty the queen, respondent and (your name), Applicant

**Charge:-** [Insert the charge or charges against you]

**Ticket No:-** [Found in the top right - hand corner of the ticket]

**Original trial date:-** [Insert]

Take Notice that on------------at--------[Am/Pm] in court room------ or as soon there after as is practicable, the applicant will apply to the presiding justice of the peace for an order changing the trial date of the above matter(s) for the following reason(s)-----------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

Dated this--------day of---------19--at the city of--------------

(Signature of Applicant)

பகுதி (42)

கடந்த அத்தியாயத்தில் வீதி ஒழுங்கு சட்டங்களை மீறி தண்டனை ரிக்கற் பெறுவதும், சில நேரங்களில் கடுமையான குற்றங்களுக்கு விசாரணைக்கு நீதின்ற 'அழைப்பு ஆணை' பிறப்பிக்கப்பட்டு விசாரணைக்கு செல்லும் போது தயார் நிலையில் இருக்க வேண்டிய பத்திரங்கள், மற்றும் தேவையான சாட்சிகளை ஒழுங்கு படுத்துதல், ஏதாவது பிரச்சனையாயின் விசாரணை திகதியினை எவ்வாறு மாற்றுதல் போன்ற விடயங்களை பற்றி ஆய்வு செய்தோம்.

விசாரணை தினத்தில் நீதிமன்ற நிலமைகளும், முன் எடுத்து செல்ல வேண்டிய செயல்பாடுகளும் பற்றி இத் தொடரில் தொடர்வோம்.

நீதிமன்றத்தில் இத்தகைய வாகன வீதி விபத்துகள் பற்றிய வழக்குகளை விசாரித்து முடிவு பண்ணும் சமாதான நீதிபதி சற்று உயரமான இடத்தில் எல்லோரையும் இலகுவாக பார்வையிடக்கூடிய இடத்தில் விசேட மேசை, நாற்காலியில் அமர்ந்திருப்பார்.

இவரது மேசைக்கு முன்பாக சற்று பதிவான நிலையில் சமாதான நீதிபதியின் சகல தொழிற்பாட்டுக்கும் உதவியாக "நீதிமன்ற கிளார்க்" என்பவர் அமர்ந்திருப்பார். இவ் "நீதிமன்ற கிளார்க்" என்பவர் சமாதான நீதிபதிக்கு உதவியாக பணி புரிவதுடன், நீதிமன்ற பத்திரங்கள் யாவற்றுக்கும் பொறுப்பாக இருப்பதுடன் நீதிமன்றத்தினுள் சகலரின் நடத்தைகள், ஒழுங்குகள் யாவற்றுக்கும் பொறுப்பாக இருப்பார். சமாதான நீதிபதியே அன்றைய நீதிமன்றத்தின் செயல்பாட்டுக்கு சர்வ அதிகாரம் படைத்த தலைவர் மாதிரி தீர்ப்புகளை வழங்குவார்.

வலது பக்கத்தில் வழக்கு தொடுநரும் அவருக்கு வழக்கில் உதவி செய்யும் பொலீஸ் உத்தியோகத்தரும் இருப்பார்கள். இடது பக்கம் எதிர்தரப்பாரும் அவரது வக்கீல் அல்லது நீதிமன்ற ஏஜென்ட்காரருக்கும் ஒதுக்கப்பட்டிருக்கும்.

சமாதான நீதிபதிக்கு பக்கத்தில் சாட்சி கூடு இருக்கும். சாட்சி வழங்குபவர் அதனுள் எழுந்து நின்று தமது சாட்சியத்தினை வழங்க வேண்டும்.

ஒவ்வொரு சாட்சியும் தமது சாட்சியத்தினை வழங்க முன்பு "தாம் சொல்வதெல்லாம் உண்மை, உண்மையினை தவிர வேறு எதுவும் இல்லை" என சத்தியபிரமாணம் பெற்று கொள்ள வேண்டும். இதனை 'நீதிமன்ற கிளார்க்' நடைமுறைப்படுத்துவார். இத்தகைய நீதிமன்ற நடைமுறைக்கு முரணாக பொய் கூறி அது நிரூபிக்கப்பட்டால் அக் குற்றம் குற்றவியல் சட்டத்தின் [Criminal Law] கீழ் வழக்கினை எதிர் கொள்ள வேண்டிவரும்.

பொதுவாக குற்றம் சாட்டப்பட்டு விசாரணைக்கு தயாராக இருக்கும் தாங்கள் நீதிமன்றம் ஆரம்பிப்பதற்கு முன்னர் சுமார் பதினைந்து நிமிடங்களுக்கு முன்னரே தாங்கள் வழக்குக்கு தயார் எனவும், தங்கள் குற்றசாட்டில் நிரபராதி என நிரூபிக்க எத்தனை சாட்கிகள் தயாராக உள்ளார்கள் என்பதும் தெரியப்படுத்துதல் வேண்டும்.


இப்போது

மொட்டையிலும் மயிர் புடுங்கலாம்



இங்கு குளிர்தேசமும், வெந்நீர் முழுக்குமே (ஷவர்) கூந்தல் உதிர்வுக்குப் பிரதான காரணமாகிறது. இதைத் தவிர்ப்பதற்கு ஒரு நம்பகமான வழியுண்டு. சபோனாவின் எவமாட்டின் கூந்தல் உதிர்வைத் தடுத்து மீண்டும் வளரச் செய்வதுடன், பொடுகு, இளநரை, செம்படை, முடி அடர்த்தியின்மை போன்ற அனைத்தையும் நிவர்த்தி செய்கிறது. இது முற்றிலும் இயற்கை மூலிகைகளினால் மட்டுமே தயாரிக்கப்படுகிறது.

**SABONA**
*& GIFT*

(416) 264-8787 (416) 269-8151

2602 B Eglinton Ave. East, Scarborough

www.tamilclub.com/sabona sabona@home.com



ஞானம்ஸ் ஸ்ரூடியோ

Introducing 1Hour Photo Lab: 3X5 & 8X12

Professional Photographer - கதிர்

☎: (416) 750-8118

2381 EGLINTON AV. E.

KENNEDY/ EGLINTON, SCARBOROUGH


<u>குற்றம் சாட்டுதலும் ஆரம்ப ஏற்பாடுகளும்.</u>

## THE ARRAIGNMENT AND PRELIMINARY MOTIONS

வழக்கு ஆரம்பமானதும் முதலில் நீததிமன்ற கிளார்க் எழுந்து தங்களுக்கு எதிரான குற்ற சாட்டினை முதலில் தெரியப்படுத்துவார். அவர் தெளிவாக தெரியப்படுத்தும் குற்ற சாட்டினை உதாரணமாக பின்வருமாறு குறிப்பிடலாம்.

**Mr. Sam, you stand charged that on or about the first day of September, 1999 at 5.05 p.m ay Southbound Yong St in the Municipality of Toronto you did commit the offence of speeding-80 k.m/h in a 50 k.m/h zone contrary to the Highway traffic act sec 128 To this charge how do you plead-Guilty or not guilty?**

மேற் றிப்பிட்ட குற்ற சாட்டினை தமிழில் பின்வருமாறு குறிப்பிடப்படும்.

'திரு. சாம் ஆகிய தாங்கள் கடந்த செப்ரெம்பர் மாதம் 1999 ஆம் ஆண்டு 1ம் திகதி பி.ப 5.05 மணியளவில் ரொரன்ரோ நகர சபைக்குள் உள்ள யங் வீதி தெற்கு பகுதியில் 50 கி.மீ வேகத்தில் வாகனம் செலுத்த வேண்டும் என சட்டரீதியாக வரையறை செய்யப்பட்ட வீதியில் வீதி ஒழுங்கு சட்டப் பிரிவு 128ம் பிரிவினை மீறி 80 கி.மீ என்னும் வேகத்தில் வாகனம் செலுத்தியிருந்தீர் என குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இவ் குற்ற சாட்டில் தாங்கள் குற்றவாளியா? சுற்றவாளியா?

இவ்வாறு ஆரம்பிக்கப்படும் வழக்கில் தாம் குற்றவாளியா அல்லது சுற்றவாளியா? என பதில் வழங்கலாம் அல்ல்து இதன் ஆரம்ப ஏற்பாடுகளுக்கு செல்லலாம். (தொடரும்...)


மேலதிக தொடர்புகளிற்கு: சிவ பஞ்சலிங்கம் – (416) 321–0999

(Professional Licensed Instructor In Car & Class Room)

## <u>பழந்தமிழர் கலாச்சாரமும் அக்குபங்ஷர் வைத்தியமும்</u>

பகுதி:- 02

*-Dr. N. S. Moorthy Ph.D*

### <u>நரம்பு வியாதிகளும் - அக்குபங்சர் சிகிச்சையும்</u>

நரம்பு மண்டல நோய்களிற்கு அக்குபங்சர் சிகிச்சை சிறந்தது.



பொதுவாக மருத்துவ உலகில் பெருமளவு நோயாளிகளின் உள்ளடங்கிய பகுதியாகிய நரம்புமண்டலம் **(NERVOUS SYSTEM)** சம்பந்தமான நோய்கள் காணப்படுகின்றன. பல்வேறு குணங்ககுறிகள் சேர்ந்து காணப்படும் இந் நோய் நிலைகள் தாங்கொணாத வலி **(SEVERE PAIN)** முதல் பாரிசவாதம் **(PARALYSIS)** உணர்ச்சியற்றுப் போதல் **(NUMBNESS)** தன்னியங்கிச் செயல்பாடுகளில் மாற்றம் **(AUTONOMIC DISORDERS)** முதலானவற்றை உள்ளடக்கியதாகவுள்ளது.

மேலைத் தேச வைத்திய முறைகளில் மேற்கூறப்பட்ட நோய் நிலைகளிற்கு குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய சிகிச்சைகள் எதுவும் இல்லாத காரணத்தால் உடற் பயிற்சிச் சிகிச்சை விட்டமின் மருந்துகள், தூக்க மாத்திரைகள் போன்றவைகளே பாவிக்கப்படுகின்றன. இம் மருந்துகள் எதிர்பார்க்கும் நன்மையை விட கூடிய தீமைகளை விளைவிக்கக் கூடியன. பல நோயாளிகள் இவற்றுக்குப் பழக்கப்பட்டு மீளமுடியாத நிலைக்குத் தள்ளப்பட்டு பரிதாப நிலையை அடைகின்றார்கள். அதுமட்டுமல்லாது நீண்ட காலத்திற்கு இம் மருந்துகளைப் பாவிப்பதனால் பல்வேறுபட்ட பக்க விளைவுகள் உடலிலும் மனதிலும் தோன்றுகின்றன. மேலும் மருந்துளுக்கு பழக்கப்பட்டு போவதனால் அவற்றின் அளவுகளையும் எண்ணிக்கையையும் அதிகரிக்க வேண்டி ஏற்படுகின்றது. இது மேன்மேலும் பிரச்சனைகளை உருவாக்குகின்றது. பொருளாதார ரீதியிலும் இது தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. முன்னர் ஏற்பட்ட நோயை விட பல்வேறு பக்க விளைவுகளினால் நோயாளி பலவீனமுற்று மனோநிலை பாதிக்கப்படவும் ஏதுவாகின்றது.

இந் நிலையில் மேற்கூறிய நரம்பு மண்டல நோய்களிற்கு பாதிப்பு எதுவுமற்ற சிகிச்சை முறையாக அக்குபங்சர் திகழ்கின்றது. இதன் அதி உன்னத வலி நீக்கும் தன்மை, குறிப்பாக வலியால் துடிக்கும் நரம்பியல் நோயாளிகளிற்கு பெரும் நிவாரணியாக அமைகின்றது. அது மட்டுமல்லாது செயலிழந்து காணப்படும் தசைகளை மீண்டும் இயங்க [illegible]ப்பது வேறு எந்த மருத்துவ முறையிலும் இல்லாத ஓர் சிறப்பு அ[illegible]மாகும்.

மேலும் நரம்பு மண்டல நோயாளிகளில் காணப்படும் பேச்சுத்தடுமாற்றம் **(SPEECH DIFFICULTIES)** உணரும் தன்மைக் குறைபாடு **(PARASTHESIA)** உறுப்புக்களின் செயற்பாட்டுக் குறைவு போன்ற நிலைகளும் அக்குபங்சர் சிகிச்சை மூலம் அபரீதமான முறையில் குணமடைகின்றன. காக்கை வலிப்பு **(EPILEPSY)** பார்க்கின் சோனிசம் **(PARKIN SONISM)**. தாங்கொணா தலைவலி **(HEADACHE)**. ஒற்றைத் தலைவலி **(MIGRAINE)**. பீனிசம் **(SINUSITIS)**. தூக்கமின்மை, தசையிறுகிய பாரிசவாதம், முகவாதம், ஒற்றைப் பக்க முகவலி ஆகியன அக்குபங்கசர் சிகிச்சை மூலம் நன்கு பலன் பெறக்கூடிய நோய் நிலைகள் ஆகும்.

நெஞ்சு, முதுகு ஆகியவற்றில் சேர்ந்து ஏற்படும் வலி இடுப்பிலிருந்து கால்வரை ஏற்படும் வலி, முதுகு வலி, சிறு நரம்புகளில் ஏற்படும் விறைப்பு, வலி, உணர்ச்சிக் குறைபாடு மத்திய நரம்புத் தொகுதியில் ஏற்படும் பாதிப்பின் விளைவாக ஏற்படும் தூக்கமின்மை, மயக்கம், நெஞ்சுப் படபடப்பு, காதில் புதுவித ஒலிகளை உணருதல் போன்ற நிலைகளை உள்ளடக்கும் நரம்புப் பலவீன நிலைகளிற்கும் அக்குபங்சர் சிகிச்சை உகந்தது.

மனநிலை மாற்றங்களினால் ஏற்படும் ஹிஸ்தீரியா, ஸ்கிஸோபிரனியா போன்ற நோய் நிலைகளிற்கும் இச் சிகிச்சை முறை நல்ல பலனைத்தரும். மேற்கூறிய இரு நோய் நிலைகளும் பெரும்பாலும் இளம்பெண்களைத் தாக்கும் நோய்களாகும். காரணமின்றி அழுதல், நடுக்கம், பலவீனம், வலிப்பு, உணர்ச்சியின்மை, திடீர் சிரிப்பு, ஓய்வின்மை ஆகியவை இவற்றின் குறி குணங்களாகும். இரண்டாவது நோய் நிலையில் அதீத கற்பனை, சந்தேகம், இல்லாதவற்றைப் பார்ப்பது போலவும், கேட்பது போலவும் பாவனை செய்தல், யாரோ தன்னைத் தாக்கப் போவது போன்ற உணர்வு, பிரமை பிடித்த நிலை போன்றவை காணப்படும். உடல் பரிசோதனையில் எவ்வித குறைபாட்டையும் கண்டுபிடிக்க முடியாது. மேற்கூறிய இரண்டு மன நோய் நிலைகளிற்கும் அக்குபங்சர் உகந்த சிகிச்சை முறையாகும்.

கிருமிகள் தாக்குவதனால் ஏற்படும் நரம்புமண்டல நோய்களான போலியோ மயலைடிஸ், மயல்ஜிக் என்கபலோ மயலைடிஸ் (இது எம்.இ. என அழைக்கப்படுவது.) மற்றும் வைரஸ் தொற்றை அடுத்துத் தோன்றும் களைப்பு நிலையான **POST VIRAL FATIGUE SYNDROME** ஆகியவற்றிற்கு அக்குபங்சர் முறை மூலம் நாட்படாத நிலையில் சிகிச்சையளித்தால் அதியுன்னத பலனைப் பெறலாம்.

குழந்தைகளைப் பொறுத்த வரையில் ஏதாவது ஒரு காரணத்தால் காச்சல் ஏற்பட்டு அதி வெப்ப நிலையால் மூளைதாக்கப்பட்டு ஏற்படும் வலிப்பு நிலைக்கு அக்குபங்சர் ஓர் உடனடிச்சிகிச்சை முறையாகும். சீனாவைப் பொறுத்த வரை ஒவ்வொரு தாய்மாரும் இம் முதலுதவிச் சிகிச்சை முறையை நன்கு அறிந்து வைத்திருப்பதனால் குழந்தை வலிப்பு நோயை மிக இலகுவாக சமாளிக்க முடிகின்றது.


# Safety Truck
## Training School Ltd.

**Training & Trucking Classes A, D & Z**

கனடாவில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது தமிழ்
TRUCK DRIVING பயிற்சி இடம் (6ம் ஆண்டு)
வாரத்தில் எழு நாட்களும் பயிற்சிகள் வழங்கப்படும்.

**We accept Welfare & Unemployment Insurance**




தமிழ் மொழி மூலம் அனைத்துப் பயிற்சிகளும் தனித்தனியாகக் கொடுக்கப்படும். (One on One Training) அனுமதிப்பத்திரத்திற்கு (License) உத்தரவாதம் அளிக்கப்படும்.
வேலை எடுப்பதற்கும் உதவிகளும் ஆலோசனைகளும் வழங்கப்படும்.

**In Classes**
- 365 (Learning Permit)
- Lock Books
- Air Brake (Z)
- Dangerous Goods
- Border Crossing
- Defensive Driving Course

சிறந்த பயிற்சி பெற அழையுங்கள்

**YOGAN SOCKALINGAM**
Truck Driving போதனாசிரியர்
(12 Years Canadian Experience with Trucks)

**Tel: (905) 793-9546 / (416) 616-5979**

**250 Summerlea Road, Brampton, ON**


உங்களுக்குத் தெரியுமா கனடாவில் பெரும்பாலான மக்கள் ஒரு குடும்ப வைத்தியர் வைத்திருக்கிறார்கள். அக் குடும்ப வைத்தியருக்கு அவர்களை [illegible] மருத்துவ வரலாறு தெரியும். அவர்களுக்கு மருத்துவ பிரச்சனை வரும் போது. அவர்கள் இந்த வைத்தியரை கூப்பிடுகிறார்கள். சில வேளைகளில் குடும்ப வைத்தியர் நோயாளிகளை விசேட நிபுணரிடம் ஆலோசனை கேட்கச் சொல்வார்.

பெண்களிற்குரிய நோய்களான மாதவிடாய்க் கோளாறுகள், முறை தவறிய மாதவிடாய், தடைப்பட்ட மாதவிடாய், வலியுடன் கூடிய மாதவிடாய், அதிக குருதிப் பெருக்கு போன்ற நிலைகளிற்கும் இது சிறந்த சிகிச்சை முறையாகும். இடுப்பின் உள்ப்பகுதியில் ஏற்படும் தாபித நிலைகள் வெள்ளை படுதல், அடிவயிற்றுவலி, கருப்பையிறக்கம், கர்ப்ப காலத்தில் ஏற்படும் மசக்கை, அதிக வாந்தி, கருப்பையில் நிலைமாறிய சிசு, பேறுகாலவலி, நீண்ட பேறுகாலம், பால் சுரத்தல் போன்ற நிலைகளை நிவர்த்தி செய்யவும் அக்குபங்சர் சிகிச்சை அதிசிறந்த வைத்திய முறையாகும். அறுவைச் சிகிச்சையின்றியும் தேவையற்ற இரசாயனக் கலவைககளின்றியும் இயற்கைமுறையில் பெண்களின் குறைபாடுகளை நீக்குவதில் இச் சிகிச்சை முறை முன்னனி வகிக்கின்றது.

மூட்டு நோய்களைப் பொறுத்தவரை மற்றெல்லா வைத்திய முறைகளும் தோல்வியுற்ற நிலையில் கைகொடுத்து உதவும் சிகிச்சை முறை இதுவாகும். இடுப்பு வலியை எடுத்துக் கொண்டால் விபத்து காரணமாக ஏற்படும் வலி தசைகளிலேற்படும் தாக்கம், வாதநோய் காரணமாக ஏற்படும் வலி ஆகிய சகல நிலைகளிற்கும் உரிய சிகிச்சையாக அமைவது அக்குபங்சர் முறையாகும். தோள்மூட்டு வலியைப் பொறுத்த வரை தோள் மூட்டுக் கவசத்தில் ஏற்படும் தாபிதமாக இருந்தாலும், தசை நாண் தாபிதமாக இருந்தாலும், எலும்புகளுடன் கூடிய இசிவாக இருந்தாலும் தோள்மூட்டு இறுகிய நிலையாக இருந்தாலும் சரி மேற்கூறிய சகல நிலைகளிற்குரிய சிறந்த சிகிச்சை முறையாக இது திகழ்கின்றது.

முழங்கைகளில் ஏற்படும் டெனிஸ் எல்போ, தசைத்தாபிதம் போன்றவற்றிற்கும் இது சிறந்தது. மணிக்கட்டு மூட்டில் ஏற்படும் வலி விரல்களிற்கு இடையிலான வாத நோய் வலி, முழங்கால் மூட்டுகளில் தாக்கம் காரணமாக உண்டான வலி, வாத நோய் வீக்கம், கணுக்காற் பிறழ்வு போன்ற நிலைகளிற்கும் அக்குபங்சர் சிறந்த சிகிச்சை முறையாகும். தற்போது கனடா போன்ற குளிர்ப் பிரதேசங்களில் பலரையும் பாதிக்கும கழுத்துபிடிப்பு, பிடரிவலி, வீக்கம் ஆகியவற்றிற்கும் உரிய நிவாரணியாக இச் சிகிச்சை முறை விளங்குகின்றது.

(தொடர்...)

# விளையாட்டுத் தகவல்கள் (66)

–எஸ். கணேஷ்



## 20 ஆம் நூற்றாண்டின் சிறந்த உதைபந்தாட்ட வீரர் பிலேயா? அல்லது மறடோனவா?

### உதைபந்தாட்டம்

சென்ற உலக தமிழோசை இதழில் உலகத்திலேயே விடிவெள்ளியாக மிளிரும் பிலே யைப் பற்றிய முழு விபரங்களையும் பார்த்தோம். இவ் வாரம் உலக அளவில் பிலேயோ அல்லது மறடோனவா? என்று பெருத்த பிரச்சனை கிளம்பியுள்ளது. இந்த மில்லனியம் வருட முடிவில் FIFA 20ம் நூற்றாண்டின் சிறந்த உதைபந்தாட்ட வீரர் யார் என அடையாளம் கான உலகத்திலே உள்ள உதைபந்தாட் ரசிகர்கள் எல்லாருடனும் INTERNET மூலம் வாக்கெடுப்பு நடத்துவது என FIFA தீர்மானித்தது. இதன்படி பிரேசில் நாட்டைச் சேர்ந்த பிலேயா, ஆர்ஜன்ரீனா நாட்டைச் சேர்ந்த மறடோனாவா, ஜேர்மனியை சேர்ந்த பிரான்ஸ் பேக்கிம் பவர்ரா, பிரான்சை சேர்ந்த பிளற்றினியா என்று Internet மூலம் ரசிகர்களிடம் விடப்பட்டது. இதன் மூலம் கடந்த வாரம் இறுதிக் கணிப்பின்படி ஆர்ஜன்ரீனாவை சேர்ந்த மறடோனாவே தேர்ந்தெடுக்கப்பட்டார். இங்கு தான் பிரச்சினையே கிளம்பியது. பல பத்திரிகைகள் தொலைக்காட்சி நிறுவனங்கள் பல ரசிகர்கள் இந்த தீர்ப்பை எதிர்த்தனர். இப்படி ஒரு புது பிரச்சினை கிளம்பியவுடன் FiFA Player of the Century விருது இரண்டு வீரர்களுக்கு வழங்க உள்ளதாக FIFA தீர்மானித்தது. பிலேயையும் மறடோனாவையும் ஒப்பிடும்பொழுது நிச்சயமாக பிலே தான் சிறந்த வீரர் என்று எல்லோரும் சொல்வார்கள் என்பது கண்கூடு. பிலே 3 தடவை World Cup ஐ பிரேசிலுக்காக பெற்றுக் கொடுத்தவர். ஆனால் மறடோனாவோ ஒரே ஒரு தடவையே ஆர்ஜன்ரீனாவுக்கு World Cup ஐபெற்று கொடுத்தார். இருவரது விளையாட்டு திறமைகளையும் ஒப்பிடும் பொழுது இருவரும திறமை வாய்ந்தவர்கள் என்றே சொல்ல வேண்டும். ஆனாலும் ரசிகர்கள் ஏன் மறடோனாவை தெரிந்து எடுத்தார்கள். கேள்விக்குப் பதில், தற்போது இளம் சமுதாயம் கூடுதலாக நேரில் கண்டு களித்த ஆட்டங்கள் மறடோனாவுடையதாகும். 1956ஆம் ஆண்டு பிலே World Cup வென்றதை தற்போது இளம் ரசிகர்கள் மறந்து இருப்பார்கள். அதனால் ரசிகர்களின் கண்ணுக்கு மறடோனா தென்பட்டதில் தப்பில்லை என்று தான் கூறவேண்டும்.

பிரேசிலின் உதைபந்தாட்ட விளையாட்டு வீரர் பெலே, FIFA இனால் 20ஆம் நூற்றாண்டிற்கான சிறந்த வீரரிற்கான பரிசு பெறுதல்



உதைபந்தாட்டத்தில் சரித்திரம் படைத்த ஆர்ஜென்டீனா விளையாட்டு வீரர் மரடோ, 20ஆம் நூற்றாண்டிற்கான சிறங்க விளையாட்டிற்கான பரிசு பெறுதல்



FIFA இனால் தெரிவு செய்யப்பட்ட 1வது சிறந்த விளையாட்டு வீரர் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த செடான்



டிசெம்பர் 11ஆம் திகதி இத்தாலியின் Rome நகரில் FIFA AWAD நடந்தேறியது. இதன் விபரத்தை இங்கு பார்ப்போம்.

FIFA Player of the Century மறடோனா (ஆர்ஜன்ரீனா), பிலே (பிரேசில்)

FIFA World Best Player 2000 -

| | | |
|---|---|---|
| 1ஆம்: | Zidaue (பிரான்ஸ்) | 370 புள்ளிகள் |
| 2ஆம்: | Luis Figo (போர்த்துக்கல்) | 329 புள்ளிகள் |
| 3ஆம்: | Rivaldo (பிரேசில்) | 263 புள்ளிகள் |

பெண்கள் வரிசையில் FIFA Player of the Century *Michelle Akers (அமெரிக்கா), Sunwen (China)*


Club of the Century : *Real Madrid (Spain)*

Bes tMover of the year 2000: *Nigeria*

Team of the year 2000: *Netherland*

மேற்குறிப்பிட்ட சகல விருதுகளும் 150 நாடுகளை சேர்ந்த Coaches மூலம் வாக்கெடுப்பு முறையில் தீர்மானிக்கப்பட்டது

2000 ஆம் ஆண்டின் 2வது சிறந்த உதைபந்தாட்ட விளையாட்டு வீரர் லூயிஸ் பிஹோ -போர்த்துக்கல்



FIFA இனால் தெரிவு செய்த 3வது இடத்திற்கான சிறந்த உதைபந்தாட்ட விளையாட்டு வீரர் றிவால்டோ - பிரேசில்



World Player of the year விருது 1991ஆம் ஆண்டு தொடக்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| 1991 | - Lother Mattaus | (ஜேர்மனி) |
| 1992 | - Mareo Van Basten | (ஹொலண்ட்) |
| 1993 | - Roberto Baggio | (இத்தாலி) |
| 1994 | - Romario | (பிரேசில்) |
| 1995 | - Geogre Weah | (லைபீரியா) |
| 1996 | - Ronaldo | (பிரேசில்) |
| 1997 | - Ronaldo | (பிரேசில்) |
| 1998 | - Zidane | (பிரான்ஸ்) |
| 1999 | - Rivaldo | (பிரேசில்) |
| 2000 | - Zidane | (பிரான்ஸ்) |


காப்புறுதி / இன்சூரன்ஸ்

எங்களில் தங்கியுள்ளவர்களிற்கான நியாயமான பாதுகாப்பு

LIFE INSURANCE

| Age | $100,00 m/f | $250,000 m/f | $500,000 m/f |
|---|---|---|---|
| 30 | 11.34/9.90 | 17.50/15.00 | 29.25/23.85 |
| 35 | 12,06/10.17 | 18.68/16.43 | 31.50/26.55 |
| 40 | 13.14/12.24 | 22.28/20.00 | 40.00/32.40 |
| 45 | 17.46/14.22 | 30.15/24.98 | 53.35/44.10 |
| 50 | 23.49/17.01 | 42.50/32.18 | 80.00/59.40 |
| 60 | 50.67/30.00 | 92.50/72.00 | 180.00/138.15 |
| 65 | 79.20/54.09 | 175.00/115.45 | 345.00/209.17 |

தொடர்புகளுக்கு: **Paul Ram Narayan ☎: (416) 414-2202**

Life & Investment Broker



புதிய இடத்தில் புதுப்பொலிவுடன்


NEW Technology


Security and Sound Inc.

**Car Alarm, Remote car starter, LED scanner, Stereo, Fog lamps And Sports Accessories.**

Sales And Installation

SPECIAL











உங்களுக்கு தேவையான அனைத்தையும் பொருத்திக்கொள்ளவும் பெற்றுக்கொள்ளவும் நாடுங்கள்

Tel:(416)335-4070 Fax:(416)335-9936

Ratheesh Cell:(416)451-0287 Shanger Cell:(416)451-4517

3501 McNicoll Ave., Unit # 9. Scarborough, Ont. M1V 2N3


டிசெம்பர் 1ஆம் திகதி வெளிவிடப்பட்ட முதல் 10 நாடுகளின் FIFA தரங்கள்

| Rank | நாடு | புள்ளிகள் 2000 | இறுதி நிலை 1999 | வித்தியாசம் 1999Vs2000 |
|---|---|---|---|---|
| 1. | பிரேசில் | 818 | 1 | 0 |
| 2. | பிரான்ஸ் | 801 | 3 | +1 |
| 3. | ஆர்ஜன்ரீனா | 762 | 6 | +3 |
| 4. | செக்கோஸ்லாவாகியா | 748 | 2 | -2 |
| 5. | இத்தாலி | 746 | 14 | +9 |
| 6. | ஸ்பெயின் | 742 | 4 | -2 |
| 7. | போர்த்துக்கல் | 740 | 15 | +8 |
| 8. | ஜேர்மனி | 715 | 4 | -3 |
| 9. | யூகோஸ்வாலாகியா | 712 | 13 | +4 |
| 10. | நெதர்லாந்து (Holland) | 711 | 19 | +9 |

அடுத்த World Cup 2002 கொரியா/ஜப்பான் நாடுகளிலும், 2006ஆம் ஆண்டு World Cup ஜேர்மனியிலும் நடைபெற இருக்கின்றது.

# அன்றிலிருந்து இன்றுவரை சினிமா

## 1931 ஆம் ஆண்டு தொடக்கம் வெளியான படங்கள்

-தொகுப்பு - பரம்

*1982ஆம் ஆண்டின் படங்களின் தொடர்ச்சி(4)*



இந்த ஆண்டு சிவாஜி கணேசன் நடித்து வெளிவந்த தமிழ் படங்கள் 12 ஆகும். ஹிட்லர் உமாநாத், ஊருக்கு ஒரு பிள்ளை, வா கண்ணா வா, கருடா சௌக்கியமா, சங்கிலி, வசந்தத்தில் ஒரு நாள், தீர்ப்பு, தியாகி, துணை, பரீட்சைக்கு நேரமாச்சு, ஊரும் உறவும், நெஞ்சங்கள். இவற்றில சிவாஜியுடன் சங்கிலி படத்தில் பிரபு முதலில் தமிழ் சினிமாவில் தோன்றியிருந்தார்.

விஜயகாந்தின் 7 படங்கள் இந்த ஆண்டில வெளிவந்தன. பார்வையின் மறுபக்கம், பட்டணத்து சாசனங்கள், ஆட்டோராஜா, சிவந்த கண்கள், ஓம் சக்தி, சட்டம சிரிக்கிறது, நான் சூட்டிய மலர். 1979ஆம் ஆண்டு விஜயகாந் 'இனிக்கும இளமை' படத்தில் முதல் தோன்றியிருந்தார். இந்த ஆண்டுடன் மொத்தமாக 18 படங்கள் நடித்து இருந்தார். புரட்சிக் கலைஞர் விஜயகாந்த நடித்து மொத்தமாக 7 படங்கள் 1982ஆம் ஆண்டு வெளிவந்தது இருந்த போது எந்த ஒரு படமும் 100 நாட்கள் வரை ஓடவில்லை. ஆனால் படக்கணக்கில் 7 படங்கள் வெளிவந்து இருந்தன.

இந்த ஆண்டு K. பாலசந்தரின் கதை, வசனம், டைரக்சனில ஒரு படம் வெளிவந்தது. "அக்னி சாட்சி". இந்த ஆண்டு சினிமா சங்க விருது "அக்னி சாட்சி" படத்திற்கு கிடைத்திருந்தது.

**சங்கிலி**



1982ஆம் ஆண்டு சங்கிலி படத்தில் பிரபு முதல் முதலாக தோன்றியிருந்த போதும், ஆண்டு முடிவிற்குள மொத்தமாக 7 படங்கள் நடித்து இருந்தார். அவையாவன சங்கிலி, நலந்தானா, லாட்டரி ரிக்கட், கண்ணோடு கண், அதிசயப் பிறவிகள், சின்னஞ்சிறுசுகள், கோழிகூவுது ஆகும். (தொடரும்)

## வேலவன் பிலிம்ஸ் ஆதரவில் சினிமாப் போட்டி

இப்போட்டியில் வெற்றிபெறும் முதல் மூவருக்கு 'வேலவன் பிலிம்ஸ்' ஸ்தாபனத்தாரினால் 3 இலவச ரிக்கற்றுக்கள் வழங்கப்படும்.

**சினிமா போட்டி # 3**

1. ''மின்னலே' படத்தின் கதாநாயகன்/நாயகி பெயர் என்ன?
2. 'வாழ்த்துகிறேன்' படத்தின் டைரக்டர் யார்?
3. பிரபு நடித்த முதல் தமிழ்ப் படம் எது?




**** சினிமாப் போட்டி #2இன் விடைகள்***

1. அருண்குமார் 2. ஹென்றி 3. தெனாலி

***போட்டி #2இல் வெற்றி பெற்றவர்கள்**


1. V. Tamilselvi, Scarborough
2. D. புனிதா, Toronto
3. L. Ragunathan, Scarborough



இதற்குரிய விடைகளை January 15, 2001 இற்கு முன்பாக 'உலக தமிழோசை' இன் விலாசத்திற்கு அல்லது தொலைநகல்- Fax: (416) 282-4978 இற்கு அனுப்பலாம்.

**'வேலவன் பிலிம்ஸ்' தாபனத்தாரின் நத்தார் நல்வாழ்த்துக்கள்**


S.G.M
steam carpet cleaning
*சேர்பா செற் *வீடுகள் *காரின் உட்புறம்
*Apartments*Condominiums*carpets
மிகவும் குறைந்த செலவில் செய்துகொள்ள இன்றே அழையுங்கள்
Toronto
Home: (416) 754-0963
Cell:(416) 455-9402
கணேஸ்
Missisauga
(905) 403-0139


T. R. S. AUTO
SPECIALIST TOYOTA HONDA
MOTOR VEHICLE SPECIALISTS
FOR REPAIR & BUY & SELL

OIL CHANGE SUNDAYS $12.99 Reg 14.99
உள்ளூர், இறக்குமதி செய்யப்பட்ட சகல ரக வாகனங்களுக்கும் அனுபவம் வாய்ந்த மெக்கானிக்குகளால் சிறந்த முறையில் திருத்திக் கொள்ள நாடுங்கள்
We Sell Quality Used Cars
Licensed Mechanics on duty
Guaranteed Services
Reasonable Rates
Free Visual Inspection and Proper Advice
Licensed to do Air Condition Services
We Rebuild Alternators & Starters
Rust Proofing
Body Work and paint


TUNE - UP •
BRAKES •
GENERAL MAINTENANCE •
ELECTRICAL WORKS •
ALL KIND OF REPAIRS •
OIL & FILTER CHANGE WITH CASTROL GTX
ALARM, STEREO, ELECTRICAL WORKS USED PARTS SALES, ETC.
We sell New & Used Tire SPECIAL
Wheel Balance & Tire Rotation $22.99
Front Brake Pad & Labour (Front Brake) $59.99
Rear BRAKE (Shoe & Labour) $59.99


Call: Kumar
Tel: (416) 609-8110
86 MELFORD DR. UNIT 14

தமிழர்கள் மத்தியில் பலவருட அனுபவம் மிக்கவர்களால் ஆரம்பிக்கப்பட்டுள்ள புதியதோர் வெதுப்பகம்
BREAD MASTER BAKERY
பிறட் மாஸ்ரர் பேக்கரி
மொத்த ஓடர்களுக்கு விசேட கழிவு வழங்கப்படும்

ரோஸ் பாண் கிடைக்கும்
பாண், பணிஸ், றோல்ஸ் அனைத்தும் சுடச்சுட எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.
வாரத்தில் 7 நாட்களும்


3 for 0.99¢
31 TAPSCOTT ROAD, UNIT #B3
LOWER LEVEL, MALVERN TOWN CENTRE - SCARBOROUGH
TEL: (416) 299-5083


பூட்டு? சாவி?
KEERTH LOGSMITH
வீடு-வியாபாரம்-தொழிலகம்
வீட்டு திறப்புகள் தொலைந்து விட்டதா? மாற்ற வேண்டுமா? மற்றும் உங்களது சகலவித திறப்பு சம்பந்தமான பிரச்சினைகளிற்கு தீர்வு காண நினைவில் வைத்திருக்க வேண்டிய தொலைபேசி இலக்கம்

(416) 439-3709
Pager: 375-7330

# 21 ஆம் நூற்றாண்டில் கணனி இல்லாமல் மனிதன் வாழ முடியுமா?

-ராஜா சொக்கலிங்கம் raja@systemsplus.net
*Computer consultant*




பகுதி 22 இன் தொடர்ச்சி..
## கணனியும் காலமும்

இந்த **Digital Camera** விற்கும் பழைய அதாவது இப்பொழுது மறைந்து கொண்டு வரும் **Film** படச்சுருள் **Camera** விற்கு உள்ள வேறுபாடு என்ன என்றால்

1) படம் துல்லியம். **Film camera** வைவிட இந்த **Digital camera** இல் படங்கள் துல்லியமாக பதிவு செய்யப்படுகின்றது. இது **Digital** முறையில் பதிவு செய்யப்படுகின்றது. அதனால் இது மிகவும் துல்லியம் அதிகம்.

2) படச்சுருள்கள் என்ற ஒன்று இன்னொரு பொருள் **camera** வைவிட இன்னொரு பொருள் தேவை இல்லை. **Camera** வில் உள்ள அந்த **memory** யை படத்தை எடுத்துவிட்டு மீண்டும் மீண்டும் அதை பயன்படுத்திக் கொள்ளலாம். இது இரண்டாவது மிகப்பெரிய உபயோகம்.


3) எந்த சீதோசன நிலையும் or திடீரென்று **camera** திறக்கப்பட்டு விட்டால் அந்த வெளிச்சம் பட்டு இந்த படம் கெட்டுவிடும் என்ற பயம் இல்லை. ஏனென்றால் இது **Digital** முறை படச்சுருள் அப்படி இல்லை. ஒளி ஏதாவது ஒரு விதத்தில் **film** கள் ஒரு **film roll**ற்குள் உள்ளே சென்றுவிட்டால் எடுத்த படங்களும் or படம் எடுக்காத படச்சுருள் கூட பழுதடைய வாய்ப்பிருக்கின்றது.




நகரின் மத்தியில் பெரியதோர் தமிழ் நிறுவனம்

# செரன்டிப்
## (F) பிரஸ் மார்க்கட்

நாளாந்த பாவனைக்கு தேவையான சகல பொருட்களையும் நாளாந்தம் மலிவு விலைகளில் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்



- ஒவ்வொரு வாரமும் மலிவு விற்பனை

மேலதிக விபரங்களுக்கு: 'உலக தமிழர்' பத்திரிகையை பார்க்கவும்.

**SERENDIB FRESH MARKET**

☎:(416) 269-9913

2631 Eglinton Ave. East,Scarborough,Ont.M1K 2S2





**SYSTEM PLUS**

www.systemsplus.net
T.P (416) 321 - 5995

இதில் வரும் சந்தேகங்களையோ அல்லது எந்தத் துறைறைப் பற்றி எழுதலாம் என்று நினைக்கிறீர்களோ என்பதைப் பற்றி "உலக தமிழோசை"க்கு நீங்கள் அறியத்தரவும்.
vlambaram.@email.com


**Prayer to the Holy Spirit**

Oh Holy Spirit Thou who makes me see everything and shows me the way to reach my ideal, THOU who gives me the divine gift to forgive and forget the wrong that is done to me and who are in all instances of my life with me, I, in this short dialogue, want to thank Thee for everything and confirm once more that I never want to be separated from Thee no matter how great the material desire may be. I want to be with Thee and my loved ones in your perpetual glory, Amen.

Your wish is granted, no matter how difficult your wish may be.

Promise to publish this prayer. Thank you O Holy Spirit.


**அக்கு பஞ்சர்/சைனீஸ் மெடிசின்**

**$15 Acupuncture**
(அக்குபஞ்சர் 10 நிமிடம்,
**Tuina** (சைனீஸ் மசாஜ் இலவசம்)

**$15 Tuina**
. 25 நிமிடம்
(அத்துடன் 10 நிமிடம் அக்குபஞ்சர் இலசம்)
**Every Tuesday**

**Acupuncture & Chinese Medicine**

**Clinic of Bejing Union University**
**The college of traditional Chinese Medicine & Pharmacology (Canada)**

**Professor James X. N. Yuan**
**over 22 years Experience**
**Every Mon., Wed., Fri, Sat. Acupuncture ($40)** Each time
**Tel.: (416) 493-8447**
3443 Finch Ave. E. #302, Scarborough, Ont.



# கலைமகள் புத்தக நிலையம்




- சிறுவர்களிற்கான நீதிக்கதைகள்
- தமிழ்ப் புத்தகங்கள்
- கனடிய தமிழ்ப் பத்திரிகைகள்
- இலங்கை/இந்திய பத்திரிகைகள்
- குறுங்கதைகள், சரித்திரப் புத்தகங்கள்
- *CREDIT LEVEL* தமிழ் பாடப்புத்தகங்கள்
- கனடிய தமிழ்ப் பிரசுரங்கள் மற்றும் பலப் பல

துரித பணமாற்றுச் சேவை

**594 PARLIAMENT ST.**
**TORONTO, ONT.**
☎: (416) 921-5018

**3238 Eglinton Ave., East**
**Scarborough, Ont.**
☎: (416) 265-3605

**3850 FINCH AVE. E.**
**GO 1A**
**SCARBOROUGH, ONT.**
☎: (416) 292-9319

**2580 Sheppard Ave. #9**
**Newin Centre Mall**
**Mississauga, Ont.**
☎: (905) 306-0494






**RE/MAX®**
Crossroads Realty Inc., REALTOR
Independently Owned and Operated

வீடு வாங்க, விற்க
பூரண ஆலோசனை பெற

MEMBER OF RE/MAX HALL OF FAME

**Raja M. Mahendran, P. Eng.**
Sales Representative

MEMBER OF RE/MAX PLATINUM CLUB

**(416) 491-4002**
**Pager: (416) 589-4270**


# விண்வெளி

சூரியக்குடும்பம்:- 52

தருபவர்:- கனி

பாறை உலகங்களுக்கும், வாயு உ—ங்களுக்கும் இடையில் இரண்டையும் பிரிப்பது போல பல்லாயிரக்ண—க்கான குட்டிக் கிரகங்கள் காணப்படுகின்றன. பல்வேறு வடிவில் காணப்படும் இந்தக் குட்டிக் கிரகங்கள்தான் சூரியக்குடும்ப இரகசியத்தை எமக்கு தெளிவுபடுத்துகின்றன என்கிறார்கள் விஞ்ஞானிகள்.

இனி துணைக் கோள்களை எடுத்துக் கொண்டால் முதல் இரண்டு கோள்களுமாகிய புதனுக்கும் வெள்ளிக்கும் துணைக் கோள்கள் ஏதும் இல்லை. அடுத்து இருக்கும் எமது பூமிக்கு ஒரு சந்திரன் காணப்படுகிறது. செவ்வாயிற்கு இரண்டு சந்திரன்கள் உண்டு. ஜவியன் கோள்களாகிய வியாழன், சனி யூரேனஸ் என்பவற்றிற்குப் பல சந்திரன்கள் காணப்படுகின்றன. நெப்ரியூனுக்கு இரண்டு சந்திரன்கள் உண்டு. புளூட்டோவைச் சுற்றியும் ஒரு சந்திரன் வலம் வருகின்றது. எமது பூ[illegible]ில் காணப்படும் அல்லது தோன்றும் பல விளைவுகளுக்கு எமது பூமியின் சந்திரன் காரணமாகக் காணப்படுகிறது. கடல், சமுத்திரங்கள் போன்ற நீர்நிலைகளின் நீர் ஏற்ற, இறக்கத்திற்கு இந்த சந்திரனே முக்கிய காரணியாகிறது. இன்னும் இச்சந்திரன் இல்லாது விடில் எமக்குக் கிரகணமே இல்லாமல் போய்விடும்.



சனியின் ஒரு சந்திரன் - ரைரன் (Titan) எமது சூரியக்குடும்பத்தின் முதலாவது கோளாகிய புதனையும் விடப் பெரியது. இச் சந்திரன் ஒருவேளை ஏதாவது உயிரினத்தின் சுவடுகள் தெரியலாமோ எனச்சில விஞ்ஞானிகள் ஐயுறுகின்றார்கள். நெப்ரியூனின் சந்திரன்கள் ஏனைய சந்திரன் களைவிட முற்றிலும் வேறுபட்டுக் காணப்படுகின்றன. **Triton** எனும் நெப்ரியூனின் சந்திரன் ஏனைய சந்திரன்கள் போலல்லாது தனது தாய்க்கோளை மேற்கு முகமாக வலம் வருகிறது. **Nereid** என்ற மற்றச் சந்திரனோ நீள் வளையப் பாதையில் நெப்ரியூனை வலம் வருகிறது. சூரியக் குடும்பத்தில் காணப்படும் சந்திரன்கள் எல்லாம் பொதுவாக வட்டப் பாதையில், கிழக்கு முகமாகவே தமது தாய்க்கோள்களை வலம் வருகின்றன. இந்த நெப்ரியூனின் தப்பிப் போன ஒரு சந்திரன்தான் புளூட்டோவாக இருக்குமோ என்பதும் விஞ்ஞானிகளின் ஆரம்பக் கால சந்தேகங்களில் ஒன்று.

கா[illegible]த்திற்குக் காலம் தோன்றும் அழகான வால்வெள்ளிகள் உண்மையில் வெறும் சில ஆயிரம் கிலோ மீற்றர் விட்டமுள்ள பனிப்பந்துகள் ஆகும். நீண்ட நீள்வளையப் பாதையில் சூரியனை வலம் வரும். இந்த வால்வெள்ளிகள் சூரியனுக்கு அண்மையில் வரும்வரை உறைந்து காணப்படும். சூரியனுக்கு அண்மையில் வர சூரியச் சக்தியால் விரிவடைந்து கோமா **(Coma)** எனும் வால்வெள்ளியின் தலைப்பகுதி தோன்ற இந்த **coma** வில் இருந்து அதன் மையப்பகுதியாக கரு தூசுக்களையும், மாசுக்களையும், வாயுக்களையும் வெளித்தள்ள அவை வால்களாக கோமாவின் பின்னே நீண்டு காணப்படும். பொதுவாக வால்வெள்ளிகளின் வால்கள் இரண்டு வகையாகக் காணப்படும். தலையின் பின்னே நேராக நீண்டு காணப்படும் வால்கள் வாயுவால்கள் ஆகும். கோமா எனும் வால்வெள்ளியின் பின்னே நீண்டு வளைந்து காணப்படும் வால்கள் தூசு வால்கள் ஆகும்.

இவற்றை எல்லாம்விட சூரியத்தொகுதியில் எரிவெள்ளிகள், எரிகற்கள், விண்கற்கள் என்பனவும் உண்டு.

சூரியக்குடும்பம் பற்றி ஓரளவுக்கு சுருக்கமாக ஆனால் தெளிவாக கூறிவிட்டேன் என எண்ணுகின்றேன். அடுத்த தடவையில் இருந்து இன்னொரு சுவையான பகுதியை விண்வெளியில் பார்ப்போம்.

அனைவருக்கும் உலக தமிழோசையின் ஊடாக எனது
நத்தார் - புதுவருட வாழ்த்துக்கள்.




YARL WINDOW COVERING
1530 WARDEN AVENUE

உங்கள் எண்ணம் போல் வண்ண, வண்ணத் திரைச் சேலைகளுக்கு இப்பொழுதே தொடர்புகொள்ளுங்கள்

CUSTOM MADE..
* VENETIAN BLINDS
* VERTICAL BLINDS
* ROLLER BLINDS
* PLEATED SHADES
* DRAPERIES



இருபத்தாறு வருடங்களுக்கு மேல் அனுபவம் உள்ளவர்களால் உங்கள் திரைச் சேலைக் தைத்தக் கொடுக்கப்படும்

தொடர்புகளுக்கு: என். செல்வம்
(416) 383-0205
(416) 650-0377

FREE ESTIMATE



நான் ஒரு வழக்கறிஞர் இல்லை!




முதலில் வைத்தியசாலைக்கு செல்லுங்கள் பின் இவரை அழையுங்கள்

எஸ்.கே.தீசன்
S.K.Theesan
கலகலப்பு தீசன்

416-631-6322


CRIMINAL கிறிமினல் வழக்குகள்
DOG BITES
SLIP & FALL



பிராமணாள் சைவ உணவு

மதிய உணவுடன் இட்லி, இடியப்பம், இடியப்பபிரியாணி போன்ற இராப்போசனங்களும் பலகார வகைகளும், செவ்வாய், வெள்ளி தினங்களிலும் ஏனைய விசேட விரத நாட்களிலும் மதிய, இரவு வேளை உணவுகள் முன்கூட்டிய அறிவிப்பில் தயாரித்துக் கொடுக்கப்படும்
நீங்கள் அழைக்க வேண்டியது
அஷயா - (416) 724-8336





ELECTRICAL REPAIRS

உங்களிடமுள்ள சகல விதமான ரெலிவிசன்கள் றேடியோக்கள் வீடியோக்களை குறைந்த செலவிலும்,சிறந்த முறையிலும் குறிப்பிட்ட நேரத்திலும் திருத்திக் கொள்ளநாடுங்கள்
முருகதாஸ் - ☎ 261-6883

மலிவு விலையில் மாபெரும் சாதனைபடைத்த

# மஞ்சுளா பஷன்

நத்தார் புதுவருடத்தினத்தை முன்னிட்டு தமிழ் மக்களின் நன்மைகருதி தருகின்றது மிக நேர்மையான

# மாபெரும் மலிவு விற்பனை

**காலம்: டிசம்பர் 1ம் திகதி தொடக்கம் 25ம் திகதி வரை**

2001ம் ஆண்டிற்கான புதிய வரவுகளால் சாறிகள், நக்மா, சிம்ரான், மனுஷா, ககாரா, லங்காசூட், பஞ்சாபி சூட் சகலவிதமான ரெடிமேட் ஆடைகள் அனைத்தும் **50%** கழிவு விலையில்

- சாரம் தைத்தது Reg.$10.00 **$5.99** மட்டுமே
- U.S.A Boy's Suit 3 pcs Reg.$40.00 **$24.99** மட்டுமே
- சாப்பாட்டுத் தட்டு Reg.$3.99 **$0.99** மட்டுமே
- லைனிங் துணி Reg.$3.00 **$0.99** மட்டுமே
- சாறி Reg.$15.00 **$3.99** மட்டுமே
- தேனீர் ஆற்றும் கிண்ணம் Reg.$5.00 **$1.99** மட்டுமே
- நக்மா, மனுஷா சூட் Reg.$50.00 **$24.99** மட்டுமே
- கறிசமைக்கும் சட்டி Copper 2 pcs Reg.$30.00 **$14.99** மட்டுமே



| | நடைமுறை விலை | நம்பமுடியாத மலிவு விலை |
|---|---|---|
| பட்டுவேட்டி சால்வையுடன் | $ 50.00 | $ 29.99 |
| கோலம் ரங்கோலி அபூர்வா | $ 150.00 | $ 64.99 |
| படையப்பா, Seve Sister, டை & டை | $ 50.00 | $ 29.99 |
| மிகத் திறமையான நைலெக்ஸ் | $ 30.00 | $ 14.99 |
| பொலியஸ்ரர் சாறி பிளவுடசுடன் | $ 40.00 | $ 24.99 |
| நீலாம்பரி with blouse | $ 100.00 | $ 64.99 |
| லக்சுமி சாறி Diana | $ 80.00 | $ 49.99 |
| தெனாலி, ப்பிரியமானவளே | $ 80.00 | $ 49.99 |
| Velvet அமர்களம் பிளவுசுடன் | $ 100.00 | $ 64.99 |
| லைனிங் துணி | $ 3.00 | $ 0.99 |
